தென்னிந்திய தமிழ் திருச்சபை - அல்யென்

CSI Tamil Parish Alain, UAE

# மன்னா..



பின்பு அவர் (இயேசு) ஜனங்களையும் தம்முடைய சீஷர்களையும் தம்மிடத்தில் அழைத்து: ஒருவன் என் பின்னே வர விரும்பினால், **அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு,** என்னைப்பின்பற்றக் கடவன்.

மாற்கு 8:34

பொழிவு: 13
ஆகாரம்: 02

FEBUARY'2021

# HARVEST FEST

**12 - FEBRUARY - 2021**

C.S.I. TAMIL PARISH - ALAIN, UAE

## HARVEST FESTIVAL SPECIAL SERVICE

**6:30 PM TO 7:30PM**

## HARVEST FESTIVAL ONLINE AUCTION

**9:00 PM ONWARDS**



DONATE AUCTION ITEMS

ON OR BEFORE

**5TH FEB 2021**

# FROM THE PASTOR'S DESK

## REV. S.P BASKAR



**கிறிஸ்துவுக்குள் அன்பான இறை மக்களே..!**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திரு பெயரினால் உங்கள் அனைவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்...!!

......ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான்: பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின. II கொரி 5:17

***Therefore, if anyone is in Christ, he is a new creation. The old has passed away; behold, the new has come. II Cor 5:17***

## Lent – லெந்து காலங்கள் (தபசு காலங்கள்)

லெந்து (அ) தபசு நாட்களை Lent என்ற இலத்தின் மற்றும் டச்சு வார்த்தைக்கு வசந்த காலங்கள் அல்லது துளிர்விடும் காலங்கள் என்பதாகும். லெந்து காலங்களில் சிலுவையை நோக்கி பார்க்கும்போது பழையன கழிந்து புதியன புகுகின்ற காலம் மற்றும் மாற்றத்தை உண்டாக்கும் காலம் ஆகும்.

* **லெந்து காலம் கடவுளோடு நெருங்கி வாழ அழைக்கின்ற காலம்....**
* **லெந்து காலம் மனிதர் கடவுளோடு உள்ள உறவை புதுப்பிக்கின்றன காலம்....**
* **லெந்து காலம் கடவுளுக்கு பிரியமான அன்பின் செயல்களை நிறைவேற்றும் காலம்...**
* **லெந்து காலம் வருத்த வேண்டியது உடலை அல்ல...... மாறாக உள்ளத்தையே....**
* **லெந்து காலம் இயேசுவின் 40'நாள் சோதனையை நினைவுகூர்ந்து அர்ப்பணிக்கின்ற காலம்.**

எனவே இந்த லெந்து காலங்களில் பொருளுணர்ந்து இந்த நாட்களில் ஆண்டவருக்குள் விசுவாசத்தோடு நிலைத்து வாழ அழைக்கப்படுகின்றோம்... இந்த தபசு காலங்களில் நமது திருச்சபையின் வழியாக நடைபெறும் அனைத்து நிகழ்வுகளிலும் தவறாமல் பங்கெடுக்க அழைக்கப்படுகின்றீர்கள். குறிப்பாக இந்த ஆண்டு தபசு கால 40'நாள் தியானம் காலை 6.00 மணி முதல் 6.30 மணி வரை தினமும் நடைபெறும் திருச்சபையினர் இதில் தங்களை ஜெபத்துடன் இணைத்துக் கொள்ளுமாறு அழைக்கப்படுகின்றீர்கள்.

தொடர்ந்து இந்த காலகட்டத்தில் நமது விசுவாச வாழ்வில் சோர்ந்து போகாமல் ஆண்டவருக்குள் நிலைத்திருக்கும், தேசங்களுக்காக, திருச்சபைகளுக்காக, ஊழியர்களுக்காக, குறிப்பாக UAE உள்ள மக்களுக்காக, அவர்களின் குடும்பங்களுக்காக, பாதுகாப்பிற்காக, வேலை வாய்ப்புகளுக்காக, பொருளாதாரத்திற்காக, நமது திருச்சபையின் குடும்பங்களுக்காக, நமது பிள்ளைகளின் கல்விக்காக ஊக்கமாய் ஜெபிக்க அழைக்கப்படுகின்றோம்....

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்துவின் உன்னத பணியில் உங்கள் ஆயர் Rev. S. P Baskar






## திருமறை தியானம்

# Cross - A Call to Vicarious Suffering

பின்பு அவர் (இயேசு) ஜனங்களையும் தம்முடைய சீடர்களையும் தம்மிடத்தில் அழைத்து: ஒருவன் என் பின்னே வர விரும்பினாள், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக் கடவன் மாற்கு:8:34

*And calling the crowd to him with his disciples, he said to them, "If anyone would come after me let him deny himself and take up his cross and follow me. Mark 8: 34.*

**முன்னுரை:**

சிலுவை என்பது இன்றைய காலகட்டத்தில் ஓர் புனித சின்னமாக நமக்கு தெரிந்தாலும் இயேசு கிறிஸ்துவின் காலத்தில் ஓர் கொலை சின்னமாக தான் இருந்தது. இன்று தூக்குக்கயிறு எப்படியோ அப்படிதான். ஆனால் இந்த கொலை சின்னமான சிலுவை பிறர் வாழ்வதற்காக, அநேகர் வாழ்வதற்காக தன்னை பலியாக ஒப்புக்கொடுத்த இயேசுவினால் இது புனித சின்னமாக மாறிவிட்டது. மீட்பர் சின்னமாக மறு வாழ்வின் சின்னமாக மாறிவிட்டது. சிலுவை என்பது தோல்வியை, துன்பத்தை, அழிவை நினைப்பூட்டும் ஒன்றாக இருந்தாலும் அது பலரை வாழவைக்கும் கருவியாக நம்மை துன்பம் அனுபவிக்க, மற்றும் துன்புற அர்ப்பணிக்க சிலுவை நம்மை அழைக்கின்றது.

**"பிறர் வாழ வேண்டுமெனில் நான் சாக வேண்டும், நான் சாக வேண்டும் அவர் வாழ வேண்டும், எனில் இயேசு தினம் வாழ வேண்டும்"**

இந்தப் பாடல் நமக்கு சிலுவையின் வழியாக இயேசுவுக்காக நம்மை அற்பணிக்கவும, வாழவும் அழைக்கின்ற ஓர் அறைகூவலாக புரிந்துகொள்ள நம்மை தூண்டுகின்றது.

## சிலுவை: வெறுமையாக்கல்.

இயேசு கிறிஸ்து தன் பிறப்பு முதல் இறப்பு வரை தன்னை வெறுமையாக்கினார். "தந்தையோடு இருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷரானார்" மாளிகையில் மன்னர்கள் நடுவில் பிறக்க வேண்டியவர் மாட்டுத் தொழுவத்தில் ஆடுகளின் தீவனத் தொட்டியில் பிறந்துள்ளார். வெறுமையாக்கல் என்பது பெருமையாக நாம் எதை எண்ணுகிறோமோ அதை வெறுப்பது தான் (பணம், பதவி, அழகு, கல்வி, அந்தஸ்து) இவற்றையெல்லாம் வெறுத்து வெறுமையாக்க சிலுவை நம்மை அழைக்கிறது.

## சிலுவை: கொடுத்தல்.

கடவுள் மனுக்குலத்திற்கு அனைத்தையும் கொடுத்தார், மனுக்குலம் பாவத்தில் விழுந்தபோது தன் ஒரே மகனையே கொடுத்து உலகை, மனுமக்களை மீட்டார். தம் உடலையும் உதிரத்தையும் மனுமக்களுக்கு கொடுத்து அதன் வழியாக வாழ்வு பெற செய்தார். மனிதர்கள் வாழப் பிறந்தவர்கள். ஆனால் இயேசுவோ, மனிதர்களுக்காக சாகப் பிறந்தவர். தன் சாவை மூன்று முறை முன் அறிவித்தவர். இயேசுவின் சாவில் மனுக்குலத்திற்கு மலர்ந்தது வாழ்வு, தம்மை சாக கொடுத்து நம்மை வாழ வைத்தவர் இயேசு கிறிஸ்து.

## சிலுவை: அர்ப்பணித்தல்.

நாம் நம்மை வெறுமையாக்கவும் நம்மை பிறருக்காக கொடுக்கவும் நாம் நம்மை அர்ப்பணிக்க வேண்டும்.அற்ப்பணிப்பில் நமக்கு தடைகள் வந்தாலும் அதைத் தாண்டி செல்ல வேண்டும். இயேசுவுக்கு ஒரு தடை வந்தது. அனைவருக்காக ஒருவர் சாக வேண்டுமா? அதுவும் அவமான சின்னத்தில். ஆகவேதான் இயேசுவும் கெத்சமனே தோட்டத்தில் "இப்பாத்திரம் நீங்கக் கூடுமானால் நீங்கட்டும்" என்று சொல்லிவிட்டு தமது அர்ப்பணிப்பை உறுதி செய்தார். பிறகு தான் "ஆகிலும் என் சித்தப்படி அல்ல, உம் சித்தப்படி ஆகட்டும்" என்றார்.... நாமும் நமது அர்ப்பணிப்பில் தடுமாற்றம் பெறாமல் தன்னலமாக வாழாமல் ஆண்டவர் கொடுத்த அழைப்பின் வாழ்வில் வாழ நம்மை அர்ப்பணிப்போம்.

சிலுவையைப் பற்றி பேசும் திருச்சபை, இறைமக்கள், இயேசுவைப்போல் வெறுமையாக்கி, கொடுத்து, இறைவனுக்கு நம்மை அர்ப்பணித்து வாழ சிலுவை நம்மை அழைக்கிறது சிலுவையைப் பற்றி சிந்திக்கிற நாம் சிலுவையின் வழியே நம்மை ஒப்புக்கொடுக்க அழைக்கப்படுகிறோம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக..!
கிறிஸ்துவின் உன்னத பணியில் உங்கள் ஆயர்
Rev. S. P. Baskar




அன்பானவர்களே... லெந்துகால தியானத்தில் பங்குபெறும் அனைவரும் அந்தந்த நாளுக்குரிய திருமறைப்பகுதிகளை முன்கூட்டியே படிக்குமாறும், அத்துடன் ஒவ்வொரு நாளும் காலை 6:00 மணி முதல் 6:30 மணி வரை தியானம் நடைபெறும் போது, அனைவரும் ஜெபத்துடன் கலந்துக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

# 40 நாள் தியானம் லெந்து கால

# LENTEN DEVOTIONALS

| நாள் | தலைப்பு | திருமறைப் பாடம் |
|---|---|---|
| 17.02.2021 புதன் | நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவைக் கடவுள் - மேசியாவுமாக்கினார்.<br>God has made this Jesus, whom you crucified, both Lord and Christ. | அப். 2:36 |
| 18.02.2021 வியாழன் | நீங்கள் மனம் மாறுங்கள். உங்கள் பாவய்களிலிருந்து மன்னிப்பு பெறுவதற்காக திருமுழுக்கு பெறுங்கள்.<br>Repent and be baptised….for the forgiveness of your sins. | அப். 2:38 |
| 20.02.2021 சனி | நாசரேத்து இயேசு கிறிஸ்துவின் பெயரால் எழுந்து நடந்திடும்.<br>In the name of Jesus Christ of Nazareth, walk. | அப். 3:6 |
| 21.02.2021 ஞாயிறு | அவர்(இயேசு) பெயர் மீது கொண்டிருந்த நம்பிக்கையில்தான் இது நடந்தது.<br>It is Jesus' name and the faith….has given this complete healing to him. | அப். 3:18 |
| 22.02.2021 திங்கள் | உங்கள் பாவங்கள் போக்கப்படும் பொருட்டு மனம்மாறி அவரிடம் திரும்புங்கள்.<br>Repent, then, and turn to God, so that yours sins may be wiped out. | அப். 3:19 |
| 23.02.2021 செவ்வாய் | இகழ்ந்து தள்ளப்பட்ட கல், ஆனாலும் முதன்மையான மூலைக்கல்லாக விளங்குகிறார்.<br>The stone you builders rejected which has become the capstone. | அப். 4:11 |
| 24.02.2021 புதன் | நாங்கள் கண்டதையும் கேட்டதையும் எடுத்துரைக்காமலிருக்க எங்களால் முடியாது.<br>For we cannot help, speaking about what we have seen and heard. | அப். 4:20 |
| 25.02.2021 வியாழன் | இவ்வாறு மன்றாடியவுடன் அவர்கள் கூடியிருந்த இடம் அதிர்ந்தது.<br>After they prayed, the place where they were meeting was shaken. | அப். 4:31 |
| 27.02.2021 சனி | தூய ஆவியாரிடம் பொய் சொல்லும்படி சாத்தான் உன் உள்ளத்தை ஆட்கொண்டதேன்?<br>Why has satan filled your heart to lie to the Holy Spirit? | அப். 5:3 |

| நாள் | தலைப்பு | திருமறைப் பாடம் |
|---|---|---|
| 28.02.2021 ஞாயிறு | நாங்கள் இறைவேண்டலிலும், இறைவார்த்தைப் பணியிலும் உறுதியாய் நிலைத்திருப்போம்.<br>And will our attention to prayer and the ministry of the word. | அப். 6:4 |
| 01.03.2021 திங்கள் | உங்களுடைய மூதாதயரைப்போல நீங்களும் தூய ஆவியாரை எப்போதும் எதிர்க்கிறீர்கள்.<br>You are just like your Fathers, you always resist the Holy Spirit. | அப். 7:51 |
| 02.03.2021 செவ்வாய் | ஆண்டவராகிய இயேசுவே, எனது ஆவியை ஏற்றுக்கொள்ளும்.<br>While they were stonning him, Stephen prayed, Lord Jesus receive my spirit. | அப். 7:59 |
| 03.03.2021 புதன் | ஆண்டவரே, இந்த பாவத்தை இவர்கள் மேல் சுமத்தாதேயும்.<br>He fell on the knees and cried out, "Lord do not hold this sin against them." | அப். 7:60 |
| 04.03.2021 வியாழன் | யாராவது விளக்கிக் காட்டாவிட்டால் எவ்வாறு என்னால் தெரிந்துக்கொள்ள முடியும்?<br>"How can I," he said, "unless someone explains it to me?" | அப். 8:31 |
| 06.03.2021 சனி | சவுலே, சவுலே, ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்?<br>Saul, Saul, why do you persecute me? | அப். 9:4 |
| 07.03.2021 ஞாயிறு | அவர் எத்துணை துன்புற வேண்டும் என்பதை நான் அவருக்கு எடுத்துக் காட்டுவேன்.<br>I will show him how much he must suffer for my name | அப். 9:16 |
| 08.03.2021 திங்கள் | ஐனேயா, இயேசு கிறிஸ்து உம் பிணியைப் போக்குகிறார்.<br>Aeneas… Jesus Christ heals you. Get up and take care of your mat. | அப். 9:34 |
| 09.03.2021 செவ்வாய் | தபித்தா, எழுந்திரு, என்றார். உடனே அவர் கண்களைத் திறந்து உட்கார்ந்தார்.<br>Peter said, "Tabitha, get up," she opened her eyes and seeing Peter she sat up | அப். 9:40 |
| 10.03.2021 புதன் | உமது வேண்டல்களும் இரக்கச் செயல்களும் கடவுள் திருமுன் சென்றடைந்துள்ளன.<br>Your prayers and gifts to the poor… a memorial offering before God. | அப். 10:4 |

| நாள் | தலைப்பு | திருமறைப் பாடம் |
|---|---|---|
| 11.03.2021 வியாழன் | நீ கீழே இறங்கித் தயக்கம் ஏதுமின்றி அவர்களோடு புறப்பட்டுச் செல்.<br>Do not hesitate to go with them for I have sent them. | அப். 10:20 |
| 13.03.2021 சனி | யாவையும் தீட்டுள்ளவன் என்றோ, தூய்மையற்றவர் என்றோ சொல்லக்கூடாது.<br>God has shown me. I shouldn’t call any man impure or unclean. | அப். 10:28 |
| 14.03.2021 ஞாயிறு | ஆண்டவர் பணித்த அனைத்தையும்..கேட்பதற்கு கடவுள் திருமுன் கூடியிருக்கிறோம்.<br>Now we are all here…to listen the Lord has commanded you to tell us. | அப். 10:33 |
| 15.03.2021 திங்கள் | கடவுள் ஆள் பார்த்துச் செயல்படுவதில்லை என்பதை நான் உண்மையாகவே உணர்கிறேன்.<br>I now realise how true it is that God does not show favouritism. | அப். 10:34 |
| 16.03.2021 செவ்வாய் | நம்பிக்கை கொள்ளும் அனைவரும் அவரது பெயரால் பாவமன்னிப்புப் பெறுவர்.<br>Everyone who believe in Him receives forgiveness of sins through his name. | அப். 10:43 |
| 17.03.2021 புதன் | தூய ஆவியைப் பெற்றுக்கொண்ட இவர்கள் திருமுழுக்குப் பெறுவர்.<br>Can anyone keep these people from being baptised with water. | அப். 10:47 |
| 18.03.2021 வியாழன் | கடவுள் அவர்களுக்குக் கொடுத்தார் என்றால் கடவுளைத் தடுக்க நான் யார்?<br>So if God gave them the same gifts as he gave us who was I … oppose God? | அப். 11:17 |
| 20.03.2021 சனி | பொருளுதவியை யூதேயாவில் வாழ்ந்த சகோதரர், சகோதரிகளுக்கு அனுப்பத் தீர்மானித்தனர்.<br>The disciples … decided to provide help for the brothers living in Judea. | அப். 11:29 |
| 21.03.2021 ஞாயிறு | ”உடனே எழுந்திரும்” என்று கூற, சங்கிலிகள் அவர் கைகளிலிருந்து கீழே விழுந்தன.<br>"Quick, get up" he said and the chains fell off Peter's wrists. | அப். 12:7 |
| 22.03.2021 திங்கள் | பேதுருவின் குரல் என்பதை உணர்ந்ததும் - பேதுரு வாயில் அருகே நிற்கிறார் என்று அறிவித்தார்.<br>When she recognised Peter's voice…. And exclaimed, "Peter is at the door". | அப். 12:14 |

| நாள் | தலைப்பு | திருமறைப் பாடம் |
|---|---|---|
| 23.02.2021<br>செவ்வாய் | அனைத்து வஞ்சத்துக்கும் உறைவிடமானவனே..நீதி நேர்மை அனைத்துக்கும் பகைஞனே…<br>"You are a child of the devil and an enemy of everything that is right". | அப். 13:10 |
| 24.03.2021<br>புதன் | ஓய்வுநாளிலும் இவைப் பற்றித் தங்களோடு பேசும்படி மக்கள் அவர்களை வேண்டினர்.<br>As Paul and Barnabas…leaving…the people invited them to speak further. | அப். 13:42 |
| 25.03.2021<br>வியாழன் | மனிதர்களே, ஏன் இவ்வாறு செய்கிறீர்கள்? நாங்களும் உங்களைப் போன்ற மனிதர்கள் தாம்.<br>Men, why are you doing this? We too are only men, humen like you. | அப். 14:15 |
| 27.03.2021<br>சனி | ஒவ்வொரு திருச்சபையிலும் மூப்பர்களைத் தேர்ந்தெடுத்து..ஆண்டவரிடம் அவர்களை ஒப்படைத்தனர்.<br>Paul and Barnabas appointed elders for them in each church. | அப். 14:23 |
| 28.03.2021<br>ஞாயிறு | நமக்கும் அவர்களுக்கும் இடையே அவர் எந்த வேறுபாடும் காட்டவில்லை.<br>He made no distinction between us and them, for purified their hearts | அப். 15:9 |
| 29.03.2021<br>திங்கள் | கடுமையான விவாதம் எழுந்தது. எனவே இருவரும் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்தனர்.<br>They had such a sharp disagreement that they parted company. | அப். 15:39 |
| 30.03.2021<br>செவ்வாய் | நான் ஆண்டவரிடம் நம்பிக்கை கொண்டவள் என்று நீங்கள் கருதினால் என் வீட்டிற்கு வந்து தங்குங்கள்.<br>"If you consider me a believer in the Lord," she said come and stay. | அப். 16:15 |
| 31.03.2021<br>புதன் | நாங்கள் உரோமைக் குடிமக்கள் முறையான தீர்ப்பு இன்றியே.. சிறையில் தங்கினர்.<br>They beat us publicly without a trial, even though we are Roman Citizens. | அப். 16:37 |
| 01.04.2021<br>வியாழன் | உலகமெங்கும் கலகம் உண்டாக்குகிற இவர்கள் வந்துவிட்டார்கள்.<br>Those men who have caused trouble all over the world have now come here. | அப். 17:6 |
| 03.04.2021<br>சனி | அறியாமல் வழிபட்டுக் கொண்டிருக்கும் அந்தத் தெய்வத்தையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன்.<br>Now what you worship as something unknown, I am going to proclaim to you. | அப். 17:23 |




அன்புக்குரியவர்களே!

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்!!

......ஆரோனின் சகோதரியாகிய மிரியாம் என்னும் தீர்க்கதரிசியானவளும் தன் கையிலே தம்புரை எடுத்துக்கொண்டாள்; சகல ஸ்திரீகளும் தம்புருகளோடும் நடனத்தோடும் அவளுக்குப் பின்னே புறப்பட்டுப்போனார்கள்.

மிரியாம் அவர்களுக்குப் பிரதிவசனமாக: கர்த்தரைப் பாடுங்கள், அவர் மகிமையாய் வெற்றி சிறந்தார்; குதிரையையும் குதிரை வீரனையும் கடலிலே தள்ளினார் என்று பாடினார். யாத்:15:20,21

***Then Miriam the prophetess, the sister of Aaron, took a tambourine in her hand, and all the women went out after her with tambourines and dancing. And Miriam sang to them. "Sing to the Lord, for he has triumphed gloriously; the horse and his rider he has thrown into the sea." - Exodus 15:20,21***

இஸ்ரயேல் மக்களின் வரலாற்றில் மிரியாம் பங்களிப்பு மிகவும் சிறப்பான ஒன்றாக இருக்கிறது. இஸ்ரயேல் மக்களின் விடுதலைப் பயண வரலாற்றில் மிரியாமுடைய ஈடுபாடு மிகவும் சிறப்புத்தன்மை பெற்றவை ஆகும். ஒரு மூத்த சகோதரியாக தம் சகோதரன் மோசே நலமுடன் வாழ வேண்டும், உயிருடன் வாழ வேண்டும் என்பதற்காக ஒரு சூழலை ஏற்படுத்திக் கொடுக்கின்றார். ஒரு நல்ல புத்திக் கூர்மையுள்ள சகோதரியாக செயல்படுகிறார்.

**மோசேயின் வாழ்வில் மிரியாம் திருப்பணி:**

பார்வோனின் மகள் நதியில் குளிக்க வரும் போது, மோசேயைப் பேழையில் மிதக்க விடுகிறார் (யாத்:2) அதைக் கண்ட பார்வோனின் மகள் இளவரசி அந்த குழந்தையை எடுத்து வளர்க்க விரும்புகின்றார்; எனவே அந்தக் குழந்தையை வளர்ப்பதற்கு உதவியை நாடியபோது குழந்தையின் தாயையே கொண்டுபோய் மிரியாம் விடுகிறார். மோசே

வளர்ந்த பிறகு இஸ்ரயேல் மக்களை விடுவித்து அழைத்து வரும்போது மோசேக்கு துணையாக இருந்தார்.....

**மக்களின் விடுதலையில் மிரியாம் திருப்பணி:**

இஸ்ரயேல் மக்கள் விடுதலைப் பணியில் மோசேயுடன் இருந்து அவர்களை அழைத்து வரும்போது பாடல்களை பாடி, நடனமாடி மக்களை மகிழ்வித்து உற்சாகப்படுத்தினார். மிரியாம் ஒரு தீர்க்கதரிசியாக, புனிதராக வாழ்ந்து மரிக்கிறார். இஸ்ரயேல் மக்கள் கானானுக்குள் நுழைவதற்கு சற்று முன் "காதேஷ்" என்னும் இடத்தில் மரித்து அடக்கம் செய்யப்பட்டார்.(எண்:20:1) இவருடைய ஊக்கம், உற்சாகம், போராட்ட குணம் இஸ்ரவேலரின் விடுதலைப் பணியில் பெரும் பங்கை வகித்தது.

இன்றைக்கு நாமும் ஆண்டவரின் விடுதலைப் பணியில் இணைத்துக்கொண்டு மிரியாம் போல ஞானமுள்ளவர்களாக வாழவும், அர்ப்பணிக்கவும் அழைக்கப்படுகிறோம்.....

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.....
இறைப்பணியில் உங்கள் ஆயரம்மா....

Mrs. E. Nancy Baskar



# செயலர் மடல்



பிரியமானவர்களே…

பூமியின் கடையாந்தரத்திலிருந்து நம்மை தெரிந்து கொண்டு நம்மை பெயர் சொல்லி அழைத்த இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். சென்ற ஜனவரி மாதத்தில் தேவன் நமக்கு செய்தவைகளை நன்றியுடன் நினைவு கூறுவோம். கண்மணி போல் இம்மட்டும் காத்த தேவனுக்கு மறவாமல் அனுதினமும் நன்றி சொல்லுவோம். நாம் நினைத்ததற்கும் மேலானவைகளை அவர் செய்தார்…

நமதாவிக்குரிய வாழ்க்கையில் பல உருமாற்றங்களை கொண்டு வருகிற இந்த லெந்து காலத்தை மனமகிழ்ச்சியுடன் வரவேற்று, தேவனோடு நெருங்கி ஜீவிக்க, பாவத்தை வெறுத்தொதிக்கிவிட்டு கிறிஸ்துவுக்குள் ஒரு தவ வாழ்க்கையை இந்த புதிய மாதத்தில் மேற்கொள்வோம். ஆவிக்குரிய வாழ்வில் உருமாற்றம் பெற 40 நாட்களும் கிறிஸ்துவின் சிலுவையை பற்றிய தியானம்; தினமும் காலையில் போதகர் தலைமையில் நடத்த ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. இந்த லெந்து காலத்தை மிகச்சிறந்த முறையில் அனுசரித்து ஆவிக்குரிய வாழ்வில் சீர்திருத்தம் செய்ய முயற்சி செய்வோம்.

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் Champs for Christ-Kids Competition நடத்துவதற்கு கர்த்தர் கிருபை கூர்ந்தார். பங்கு பெற்ற, முன்னின்று நடத்தின பொருப்பாளர்களுக்காக கர்த்தரை துதிக்கிறேன். நமது திருச்சபையின் அறுப்பின் பண்டிகைக்காக, அனுதினமும் ஜெபியுங்கள்.

திருச்சபையின் ஊழியங்களுக்காக அனைவரும் ஒருமனப்பட்டு ஜெபித்து, நேசித்து தாங்குகின்ற ஒவ்வொருவருக்காகவும் நான் தேவனைத் துதிக்கிறேன். இன்னும் அதிக உற்சாகத்தோடு அனைத்து ஆலய ஆராதனைகளில் பங்கு பெற்று தேவாசீர்வாதம் பெற்று செல்ல அன்புடன் அழைக்கிறேன்.

*வரலாற்று நாயகனாம் இயேசுகிறிஸ்து நம் தனிப்பட்ட வாழ்க்கையிலும், குடும்பத்திலும், ஊழியத்திலும் தொடர்ந்து பெரிய காரியங்களைச் செய்வாராக…!!!*

*Suresh Rajan*



# அன்பு என்பது இதுவோ பாசம் என்பது இதுவோ

Men's Fellowship

அன்பு என்பது இதுவோ
ஆற்றல் என்பது இதுவோ
புரிந்துகொள்ள முடியவில்லை ஏசுவே
இந்த பாவிக்காக இறந்ததென்ன பாசமே

ஏசுவே ஏசுவே என்னை மன்னியும்
மாசில்லாத நேசமே என்னை ஏற்றிடும்...

சத்தியமே உனக்கா.. சாட்டை அடி வதையா
நித்தம் நித்தம் பொய்யுரைக்கும் எனக்காக
அடித்து நொறுக்கப்பட்டு.... நெஞ்சம் தொட்ட பாசமே

பச்சை மரத்தின் கதியே இந்த பாடு என்றால்
பட்ட மரத்தின் கதி என்ன ஏசுவே..?
என் மேல் இரக்கம்வைத்து மீட்டருளும் பாசமே

ஆவி பிரிந்தபோது... வானம் அழுத சத்தம்
கன்மலையும் குமுறியதையே ஏசுவே ...
அசையா என் மனதை கணியச்செய்யும் பாசமே..!!

ஏசுவே என்னை மன்னியும்
மாசில்லாத நேசமே என்னை ஏற்றிடும்



## எல்லாம் உனக்காக...

**உனக்காக முள்முடி, உனக்காக திருரத்த்ம்,**
**உனக்காக கசையடிகள், உனக்காக சிலுவை பாரம்,**
**உனக்காக தாகம்,**
**இன்னும் பரிந்து பேசுகிறேன்..**

**எல்லாம் உனக்காக...**

# Spiritual DISCIPLINES

**It is a training expected to produce a specific character or pattern of behaviour. It is natural component of our Christian life.**

**Purpose of Spiritual Discipline:**
**Development of our inner being, that which has been transformed by Christ. II Corinthians 5:17**

**The foremost of the Discipline is that Involving the word of God. Scripture memorisation is found in Joshua 1:8 prosperous & successful in our life.**

**Exhorts Christians to take up "the sword of the spirit, which is the word of God" as our only offensive spiritual weapon against demonic forces - Ephesians 6:17**

**We must begin any effort at spiritual discipline with the source of power, the word of God.**

**John 13:15 says, Jesus modelled the humility & posture of a servant by washing his disciple's feet and saying, I have given you an example that you also should do just as I have done to you.**

**God gives every believer different gift for the purpose of serving one another - I Peter 4:10**

**So, we can practice the discipline of service in a myriad of ways, using whatever abilities God has given us.**

**Proverbs 10:5 says Rest is not God's desire for us in every moment, we must maintain a balance of when to work and when to rest.**

**Leviticus 23:3 says Six days work, one day a week rest. Proverbs 6:9-11, Lord warns against laziness.**

**Colossians 3:23, 24 says Whatever you do, work heartily as for the Lord and not for men, knowing that from the Lord you will receive the inheritance as your reward from the God.**



Mrs. Roselin Balaji, Women's Fellowship




**“நாம் கிரகிக்கக்கூடாத பெரிய காரியங்களை அவர் செய்கிறார்” (யோபு 37:5).** நம்முடைய தேவன் மிகப் பெரியவர், மகத்துவமுள்ளவர், உன்னதமானவர். ஆகவே அவர் நம் வாழ்க்கையில் பெரிய காரியங்களைச் செய்ய முடியும். “இதோ, தேவன் மகத்துவமுள்ளவர்; நாம் அவரை அறிய முடியாது; அவருடைய வருஷங்களின் இலக்கம் ஆராய்ந்து முடியாதது” (யோபு 36:26) என்று வேதம் சொல்லுகிறது. இவ்வளவு பெரிய மகத்துவமான தேவன், அற்பமான மனிதர்களாகிய நம்மிடத்திலும் வல்லமையான காரியங்களைச் செய்பவராக இருக்கிறார்.

நாம் கடவுளைப் பற்றியும் அவருடைய ஞானத்தைப் பற்றியும், வழியைப் பற்றியும், குணாதிசயத்தைப் பற்றியும் ஒருபோதும் முழுமையாக அறிந்து கொள்ள முடியாது. தேவன் நம்முடைய வாழ்க்கையில் அதினதின் காலங்களில் நேர்த்தியாக பெரிய காரியங்களைச், செய்பவராக இருக்கிறார். **“அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்; உலகத்தையும் அவர்கள் உள்ளத்திலே வைத்திருக்கிறார்; ஆதலால் தேவன் ஆதிமுதல் அந்தம்மட்டும் செய்துவரும் கிரியையை மனுஷன் கண்டுபிடியான்”** (பிரசங்கி 3:11). ஆகவே நாம் மகத்துவமுள்ள தேவனை முழுமையாக நம்பி, அவரிடத்தில் நம்மை ஒப்புக்கொடுக்கும் பொழுது நம் வாழ்க்கையிலும் பெரிய காரியங்களைச் செய்ய வல்லவராக இருக்கிறார்.

“பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதி தேவன் சோர்ந்துபோவதுமில்லை, இளைப்படைவதுமில்லை; இதை நீ அறியாயோ? இதை நீ கேட்டதில்லையோ? அவருடைய புத்தி ஆராய்ந்து முடியாதது” (ஏசாயா 40:28) என்று வேதம் சொல்லுகிறது. நம்முடைய வாழ்க்கையில் நம்முடைய சுயவிருப்பம் நிறைவேறவில்லையென்றால் சோர்ந்துவிடுகிறோம். ஆனால் நம்மை நேசிக்கிற கர்த்தர் நம்முடைய நோக்கங்களுக்கு மேலாக உன்னதமான காரியங்களைச் செய்ய விருப்பமுள்ளவராக இருக்கிறார். ஆகவே நாம் அவருடைய அன்பை சார்ந்து வாழுவதில் ஒருக்காலும் தவறிவிடக்கூடாது. கர்த்தருக்கு காத்திருப்போம். கர்த்தர் அதினதின் காலங்களில் நேர்த்தியாக காரியங்களைச் செய்வார்.

Mr. Santhosh Kumar




தேவப் பிதா எந்தன் மேய்ப்பன் அல்லோ
சிறுமை தாழ்ச்சி அடைகிலேனே
ஆவலதாய் எனைப் பைம்புல்மேல்
அவர் மேய்த் தமர் நீர் அருளுகின்றார்

ஆத்துமத் தன்னைக் குளிரப்பண்ணி
அடியேன் கால்களை நீதி என்னும்
நேர்த்தியாம் பாதையில் அவர் நிமித்தம்
நிதமும் சுகமாய் நடத்துகின்றார்

தென்னிந்தியச் திருச்சபையின் திருச்சி–தஞ்சை திருமண்டல மிஷனரிப் பணித்தளமாக, திருச்சி மாவட்டத்திலுள்ள பச்சை மலை விளங்குகிறது. இப்பணித்தளத்தின் ஊழிய தரிசனத்தை முதலாவது பெற்றவர், “கொல்லிமலை மிஷனரி” என அழைக்கப்படும் ஆங்கிலேய மிஷனரி, ஜெசிமன் பிராண்ட் ஆவார். இவர் குஷ்டரோகிகளுக்கு அறுவை சிகிச்சை முறைகளைக் கண்டுபிடித்த, உலகப் பிரசித்தி பெற்ற மருத்துவ மேதையும், வேலூர் சி.எம்.சி (C.M.C) மருத்துவ மனையின் முன்னாள் இயக்குனருமான டாக்டர் பால் பிராண்டின் தந்தையாவார்.

தமிழைக் கற்று, கொல்லிமலை ஊழியத்திற்குத் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்த ஜெசிமனுக்குப் பிடித்த பாடல், தன் தாய்மொழியான ஆங்கிலத்திலல்ல. தமிழில் உள்ள “தேவபிதா” என்ற இப்பாடலே. தனது 43- வது வயதிலேயே, அவர் கொல்லி மலையின் விஷக்காய்ச்சலால் மரித்தபோது, அவர் அடிக்கடி விரும்பிப் பாடிய இப்பாடலையே, அவரது அடக்க ஆராதனையில், அம்மலை மக்கள் பாடினார்கள்.

இவ்வாறு, வெளிநாட்டுத் தேவ ஊழியர்களையும் கவர்ந்த இப்பாடல், கிட்டத்தட்ட இந்தியாவின் அனைத்து முக்கிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு வருகிறது. இன்றும், இந்தியாவின் வட மாநிலங்களில் நடைபெறும் மிஷனரிப் பணிகளில், பல ஆதிவாசி மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுப் பாடப்படும் முதல் பாடலாக, இப்பாடல் விளங்குகிறது. தமிழகத்தில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் கீர்த்தனைகளில், மிகச்

சிறந்ததாக இப்பாடல் கணிக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட புகழ்பெற்ற இப்பாடலை எழுதியவர், நெய்யூரைச் சேர்ந்த **யோசேப்பு** ஆவார்.

தன் இளமைப் பருவத்திலேயே தன் உடன் பிறந்தோரையும், தன் தந்தையையும் இழந்த அவர், பின்னர் தன் தாயையும் இழந்து அனாதையானார். இந்நிலையில், தன் பரம பிதாவையே நம்பி வாழ்ந்த யோசேப்பு, அவரை உரிமையோடு, "தேவபிதா" என அழைத்து, இப்பாடலை எழுதியிருக்கிறார்.

இப்பாடலின் முக்கியத்துவம் என்னவெனில், இதின் அடிப்படையான 23-ம் சங்கீதம், பலவித சூழ்நிலைகளிலும் உபயோகிக்கப்படுவது போல, இப்பாடலும், திருமணம் போன்ற சந்தோஷ நிகழ்ச்சிகளில், தேவ அருளைப் பெற வேண்டிப் பாடுவதற்கும், துயருற்றுக் கலங்கிநிற்கும் வேளைகளிலும், அருமையானவர்களை இழந்து தவிக்கும் வேளைகளிலும் ஆறுதல் பெறப் பாடுவதற்கும் ஏற்ற தகுதி நிறைந்ததாக விளங்குகிறது.

எனவே, இப்பாடல், பலதரப்பட்ட மக்களும், பற்பல மொழிகளில், இவ்வுலக வாழ்வின் பல்வேறு சூழ்நிலைகளிலும், நிகழ்ச்சிகளிலும், விரும்பிப் பாடும் சிறப்புப் பாடலாகத் தனிச்சிறப்புப் பெற்றிருக்கிறது.






# How it Works







**STEP 1** DONATE DAILY IN THIS BOX

**STEP 2** COLLECT, IDENTIFY & SEND



**STEP 3** EDUCATE & CHANGE CHILD'S LIFE

STARTING FROM NEXT ACADEMIC YEAR; THE CBS MINISTRY KIDS TOGETHER WILL SUPPORT, EDUCATE AND CHANGE ONE KID'S LIFE.

COIN SAVNG BOX WILL BE GIVEN TO ALL KIDS AND EACH KID NEED TO DROP ONE DIRHAM/DAY; AND THAT WILL BE COLLECTED FROM CBS KID'S HOUSE BY OUR CHURCH VOLUNTEER AND SENT TO THE KID FOR HER EDUCATION.

# Sharing is Caring

Sharing's Caring

YOUTH FELLOWSHIP

**Sharing makes you more significant than you are.**

**"The More You Give; the More You Receive".**

WHAT?

## COLLECTION OF DRESSES, TOYS, FOOD STUFFS ELECTRONICS

Shirts, T-shirts, sarees, kids dress, bedsheet, winter clothes, Comforter, pillows etc.

Rice, Dhal, sugar, oil, tea dust, flour, Noodle packets, Packed croissants, Cooking vessels,

Torch rechargeable, iron box, electrical cookers, Fan, warmer, Shoes, toys, brush, toothpaste, first aid kit, creep bandage

HOW?

WHEN?

COLLECTION BOX & REGISTER BOOK WILL BE PLACED IN PASORNAGE

COLLECTION FROM DATE 1 FEB 21 TO 25 MAR 21



**FOOD STUFFS, ELECTRONICS WILL BE DISTRIBUTED TO THE NEEDY WHO RESIDES IN UAE. EXCESS DRESS & TOYS DEPENDING UPON THE WEIGHT; WILL BE SENT TO INDIA BY CARGO TO ORPHANAGE/OLD AGE HOMES**




# YOU CAN SPONSOR A PRIZE...

| | | | |
|---|---|---|---|
| Singing | 400.00 | Instrumental Talent | 150.00 |
| Fancy Dress | 300.00 | Memory Verse | 800.00 |
| Mono Act | 200.00 | Memory Verse Special Prize | 500.00 |

CONTEST!

# Fancy Dress



**KINDER** — SECOND PRIZE, FANCY DRESS — JANIA PRENI

**KINDER** — FIRST PRIZE, FANCY DRESS — HARYTER SAMUEL

**BEGINNER** — FIRST PRIZE, FANCY DRESS — CHRIS GABRIEL

**BEGINEER** — SECOND PRIZE, FANCY DRESS — JOASH CYRUS

**PRIMARY- A** — FIRST PRIZE, FANCY DRESS — EFREN JOAN

**PRIMARY- A** — SECOND PRIZE, FANCY DRESS — JOHANNA JANE

**PRIMARY- B** — FIRST PRIZE, FANCY DRESS — ABIGAIL CHRISTINE

**PRIMARY- B** — FIRST PRIZE, FANCY DRESS — JEMIMA ASHNI

**PRIMARY- B** — SECOND PRIZE, FANCY DRESS — JOHAN SANJO



# Singing...



**KINDER** — FIRST PRIZE, SINGING — JANIA PRENI

**KINDER** — SECOND PRIZE, SINGING — HAZEL HARTLYN

**BEGINNER** — FIRST PRIZE, SINGING — CHRIS GABRIEL

**BEGINNER** — SECOND PRIZE, SINGING — JOASH CYRUS

**PRIMARY- A** — FIRST PRIZE, SINGING — CRASSLIN DEVONA

**PRIMARY- A** — FIRST PRIZE, SINGING — EFREN JOAN

**PRIMARY- A** — SECOND PRIZE, SINGING — KARISS ANGELO

**PRIMARY- B** — FIRST PRIZE, SINGING — ABIGAIL CHRISTINE

**PRIMARY- B** — SECOND PRIZE, SINGING — JEMIMA ASHNI



# Singing...
























# MonoAct...























# Talent Show



















# BIBLE Memory Verse CHALLENGE

| Sl.No | Class | Name | Memory Verse |
|---|---|---|---|
| 1 | KINDER | Annette Ruth Karunya | Absent |
| 2 | | Elianna Kacy Paul | 3rd Prize |
| 3 | | Aishlin Babu | Absent |
| 4 | | Hazel Hartlyn | 1st Prize |
| 5 | | Jania Preni | 1st Prize |
| 6 | | Haryter Samuel | 2nd Prize |
| 7 | Beginner | Chris Gabriel | 2nd Prize |
| 8 | | Joash Cyrus | 3rd Prize |
| 10 | | Jahosh John Joseph | 3rd Prize |
| 11 | | Reagan Shan | 2nd Prize |
| 12 | Primary A | Crasslin Devona | 1st Prize |
| 13 | | Johanna Jane | 1st Prize |

| | | | |
|---|---|---|---|
| 14 | | Efren Jona | Absent |
| 15 | | Abiya Sankaran | 3rd Prize |
| 16 | | Kariss Angelo | 2nd Prize |
| 17 | Primary B | Aaliya B. Babina | Absent |
| 18 | | Johan Sanjo | 1st Prize |
| 19 | | Abigail Christine | 1st Prize |
| 20 | | Jemima Ashni | 1st Prize |
| 21 | Junior A | Eric Aaron | 2nd Prize |
| 22 | | Jamie Shino Mathew | 2nd Prize |
| 23 | | Jeremiah Alan | 1st Prize |
| 24 | Junior B | **Jason Eric** | **Special Prize** |
| 25 | | **Jayne John Joseph** | **Special Prize** |
| 26 | Intermediate | Eric Jayden | 1st Prize |
| 27 | | Joel Shino Mathew | 3rd Prize |
| 28 | | Jonathan Asher | 1st Prize |
| 29 | | Shelbino Paul | 1st Prize |
| 30 | Senior | **Joshua Koshy** | **GOLD COIN** |
| 31 | | Naveen | 3rd Prize |
| 32 | | Roshan | 1st Prize |
| 33 | Teens | Dennis Roger | 1st Prize |
| 34 | | Annlin Sophia | Absent |

# THANK YOU

**PARENTS, CBS TEACHERS, EVENT ORGANISORS & PASTOR**

**MAY GOD BLESS YOU FOR THE EFFORTS**

# Kidz Colouring page

KINDER & BEGINNER




Please colour and sent to csitcalain@gmail.com on or before 20th Jan 2021

# WORD SEARCH

BEGINNER

**Follow the instructions to find out the Bible verse.**

Line 1: - Strike out all the letters "a "& "c "

Line 2: - Remove all the "T"

Line 3: - Remove all the Numbers.

Line 4: - Strike out all the "v "

Line 5: - Strike out the capital letters.

Line 6: - Remove the symbols

Line 7: - Strike out the numbers.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| a | a | c | t | c | h | e |
| L | T | T | o | r | T | d |
| b | 4 | l | e | 6 | s | s |
| t | v | h | v | e | v | e |
| a | B | n | D | F | d | Z |
| k | @ | e | e | $ | p | # |
| 5 | t | 9 | h | 7 | e | e |



Write the Verse here...



# Primary Just for KIDS



## Bugs in the Bible



Whether at a picnic, on the beach or playing outdoors, it seems like we're always joined by uninvited guests – bugs!
Bugs and other little creatures are mentioned in the Bible.



*Fill in the blanks with the little creatures mentioned in each verse.*
*Circle them in the puzzle below.*

**Proverbs 6:6** ___ ___ ___

**Psalms 78:45** ___ ___ ___ ___ ___

**Matt. 23:24** ___ ___ ___ ___

**Judges 14:8** ___ ___ ___ ___

**Acts 12:23** ___ ___ ___ ___ ___

**Leviticus 11:22** ___ ___ ___ ___ ___ ___

**Leviticus 11:22** ___ ___ ___ ___ ___ ___ ___ ___ ___ ___ ___

**Deuteronomy 7:20** ___ ___ ___ ___ ___ ___ ___

**Exodus 16:20** ___ ___ ___ ___ ___ ___ ___

**1 Sam. 24:14** ___ ___ ___ ___

**Isaiah 50:9** ___ ___ ___ ___ ___

**Isaiah 59:5** ___ ___ ___ ___ ___ ___

**Leviticus 11:22** ___ ___ ___ ___ ___ ___ ___ ___

**Leviticus 11:22** ___ ___ ___ ___ ___ ___ ___ ___





| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| M | O | T | H | S | G | N | A | T | B | H |
| A | N | T | A | L | L | C | H | P | E | O |
| G | R | A | S | S | H | O | P | P | E | R |
| G | F | C | R | I | C | K | E | T | S | N |
| O | L | S | P | I | D | E | R | S | B | E |
| T | E | C | L | O | C | U | S | T | D | T |
| S | A | E | F | K | A | T | Y | D | I | D |
| G | F | L | I | E | S | W | O | R | M | S |

# Unscramble Lent

**Unscramble Each Set of Letters to Make Words associated with Lent.**

| | | |
|---|---|---|
| 1 | PaSnd mylau | |
| 2 | dMahyuTad nrysu | |
| 3 | vPossrea | |
| 4 | entL | |
| 5 | yHkeeloW | |
| 6 | ldaSt uoHyyar | |
| 7 | tuTmidu | |
| 8 | ForoidGady | |
| 9 | WyydnepdeaSs | |
| 10 | Osf ydtayr | |
| 11 | yWssAdene hda | |
| 12 | daytSransEeu | |

Junior



# JUDGES

## Senior INTERMEDIATE

About 3000 years ago, the land of Israel was ruled by a succession of judges, The Lord raised up Judges to deliver Israel from their oppressors, when the Israelites cried out to Him for help. Othniel was the frst of the Judges. Ehud was the second Judge of Israel. Shamgar was the third Judge of Israel. Tola, the seventh Judge of Israel. Jair, the eighth Judge of Israel. Jephthah was the ninth Judge of Israel.

*This Month Kids Corner Concentrates On Othniel, Ehud, Shamgar, Tola, Jair, Jephthah (Judges 3:7-31, 10:1-5,11To 12 :7)*

OPEN YOUR BIBLE TO JUDGES 3:7-31, 10:1-5,11To 12 :7.
READ ,SEARCH ,WRITE.




WHO?
1. Who killed the Philistines with an ox goad?
2. Who had a fat belly?
3. Who is the left handed in today' s portion?

WHERE?
1. Where Ehud did blew the trumpet?
2. Where was Jair buried?

WHAT?
1. What is the name of the 30 towns of Jair called as?
2. What was the vow made by Jephthah to the Lord?

WHY?
1. Why 42,000 Ephraimites were killed at the fords of Jordan?

WHOSE?
1. From whose hand did Otheniel deliver the Israel.... from?

# லூக்கா 15 - 24




1. காணாமல் போன ஆட்டைக்கண்டுபிடிக்க எத்தனை ஆடுகளை விட்டு சென்றார்?
2. இயேசு சீடர்களுடன் பேசியதை பார்த்து யார் பரியாசம் பண்ணினார்கள்?
3. இயேசு எருசலேமுக்கு போகும்போது எந்தந்த நாடுகள் வழியாக நடந்து போனார்?
4. இயேசு சீடர்களை அழைத்து எங்கே போகப் போகிறோம் என்றார்?
5. யார் இயேசுவை கொலை செய்ய வகை தேடினார்கள்?
6. அவர் அவர்களை நோக்கி கிறிஸ்து---------------- சொல்லுகிறார்கள்?
7. இரவு நேரங்களில் வெளியே போய் இயேசு எங்கே தங்கினார்?
8. இயேசுவை பிரதான ஆசாரியனுடைய வீட்டிற்கு அழைத்துச் சென்றபோது பின் சென்றது யார்?
9. அழுகிற பெண்களைப் பார்த்து இயேசு என்ன சொன்னார்?
10. இயேசு உயிர்த்தெழுந்த செய்தியை அப்போஸ்தலர்களுக்கு சொன்னது யார் யார்?

## ஜனவரி மாத விடை / எழுதியவர்கள்

1. லூக்கா: 5:27 | 2. லூக்கா: 6:12 | 3. லூக்கா: 7:13 | 4. லூக்கா: 8:54 | 5. லூக்கா: 9:18
6. லூக்கா: 10:17 | 7. லூக்கா: 11:31 | 8. லூக்கா: 12:34 | 9. லூக்கா: 13:4 | 10. லூக்கா: 14:3

---

திருமதி. பிரிஸ்சில்லா ஜாண்சன், திருமதி. நான்சி பாஸ்கர், திருமதி. ஜோனீஷ் ஹெர்ஷெல், திருமதி. ஜெனிபர் இம்மாக்குலேட், திரு. ஜெயபிரதீப் கிரிஸ்டோபர், திருமதி. ஜமுனா ராணி, திருமதி. ரோஸ்லின் பாலாஜி, திருமதி. பமீலா டேனியல், திருமதி. ராதிகா செல்வகுமார், திருமதி. ஜெயந்தா ஜாண், திருமதி. ஹெப்சிபாய் நேசமணி, திருமதி. அகஸ்டா லாரன்ஸ், திருமதி. பிப்லின் நெல்சன், திருமதி. ஜெயின் ராஜவேல்




**பரிசுத்த வேதாகமம் உங்களைப் பாவத்தில் இருந்து விலக்கும்..**

**அல்லது..**

**பாவம் உங்களை பரிசுத்த வேதாகமத்தில் இருந்து விலக்கும்..!!**

# இது முடிவு அல்ல புதிய ஆரம்பம்

# THIS IS NOT THE END;

எரியும் வரை எரியட்டும், அமைதியாக இரு.
ஒரு நாள் நிச்சயம் அணையும், பொறுமையாக இரு...
எல்லாம் அணைந்த பின் ஒன்று மட்டும் மின்னும்
அப்போது தெரியும்; இதுவரை எரிந்து கொண்டிருந்தது குப்பையல்ல,
அது தங்கம் என்று....

இந்த சூழ்நிலைகளை கர்த்தர் உங்கள் வாழ்க்கையில்
அனுமதித்ததின் நோக்கம் உங்களை சிதைக்க அல்ல
உங்களை சுத்திகரிக்கவே என்பதை அப்போது புரிந்துக் கொள்ளுவீர்கள்,

தேவனால் சுத்திகரிக்கப்பட்டது எல்லாம்
தேவனாலேயே பயன்படுத்தப்படும்.
மனிதர்கள் சிறப்பானதை தேர்ந்தெடுப்பார்கள் ஆனால்
கர்த்தர் சிறப்பானதை அவரே உருவாக்குவார் - அதனால் தான்
கர்த்தரால் தெரிந்துக் கொள்ளப்பட்ட
மனிதர்களின் ஆரம்பங்கள் அற்பமாகவும்,
மனிதர்களால் ஏற்றுக் கொள்ளப்படாததுமாக இருக்கிறது.



கர்த்தர் அழைத்த மனிதனின் வாழ்க்கையில்,
மனிதர்கள் முடிந்தது என்று நினைக்கும் அந்த இடம் தான்
அவன் துவக்கத்தின் ஆரம்பம்.

கோலியாத்தின் முன் நின்ற தாவீதுக்கும்,
குழியில் வீசப்பட்ட யோசேப்புக்கும்,
வீதியில் கிடந்த யோபுவிற்கும்,
வனாந்திரத்தில் இருந்த மோசேயிக்கும்,
அரண்மனை வாசலில் அமர்ந்திருந்த மொர்தேகாயிற்கும்,
சிங்கக் கெபியில் வீசப்பட்ட தானியேலுக்கும்,

அது முடிவு அல்ல அது தான் அவர்களின் ஆரம்பம்.
இன்று உன்னுடைய சூழ்நிலையும் இதுதான் என்றால் கவலைப்படாதே
இது முடிவு அல்ல இனி தான் ஆரம்பம்.



# FEBRUARY Birthdays

| | |
|---|---|
| 2-Feb | Baby. Jessica D/o Mr. Ashok Kumar |
| 2-Feb | Mr. Naveen S/o Mr. Shankaran |
| 12-Feb | Rev. M. Christopher Rajendran |
| 13-Feb | Mr. S. Jensin Bose S/o Mr. Selva Kumar |
| 14-Feb | Ms. Jayne John Joseph D/o Mr. John Joseph |
| 17-Feb | Mr. Sunith Samuel |
| 20-Feb | Baby. Liana Ann D/o Mr. Sunith Samuel |
| 20-Feb | Mstr. Jason Eric S/o Mr. Daniel |
| 22-Feb | Mrs. Jeyantha W/o Mr. Belfer John |
| 25-Feb | Dr. Giftus Marvin S/o Mr. M. Nesamony |
| 25-Feb | Ms. Mukila D/o Mr. Ravi Chandran |
| 25-Feb | Mrs. Babitha Babu W/o Mr. Babu Abraham |
| 25-Feb | Baby. Hazel Hartlyn D/o Mr. Herchil Harish |
| 26-Feb | Mr. Lokesh S/o Mr. Shankaran |
| 27-Feb | Mr. Dienshan |

## HAPPY ANNIVERSARY



| | |
|---|---|
| 11-Feb | Mr. Justin Oliver & Mrs. Sahila Grace Justin |
| 24-Feb | Mr. A. Ravichandran & Mrs. R. Muneeswari |




EDITOR
THE PRESBYTER, CSI TAMIL PARISH, ALAIN, UNITED ARAB EMIRATES
POST BOX. 67747 | TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 343
**Email: csitcalain@gmail.com | Web: csitamilparishalain.org**

STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY

*Designed by: Mrs. Olivia Jeremiah*